தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) &
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18-7-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரையை இருப்புவைத்து விற்கவும்

உலகளவில், தென்னை எண்பதிற்கும் மேற்பட்ட நாடுகளில் சாகுபடி செய்யப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் இந்தியா மூன்றாமிடம் வகிக்கிறது. இந்திய அரசின், வேளாண்மை அமைச்சகத்தின், இரண்டாவது முன்னறிவிப்பு அறிக்கையின்படி 2013-14ல் தேங்காய் உற்பத்தி 16.05 மில்லியன் டன்களாகும். இது கடந்தாண்டை (2012-13) ஒப்பிடுகையில் 1.44 மில்லியன் டன்கள் கூடுதலாகும். தமிழ்நாட்டில் 0.46 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 4.76 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு தேங்காய் உற்பத்தியில் கேராளவை அடுத்து இரண்டாமிடம் வகிக்கிறது.

தற்போதைய நிலையில் பொள்ளாச்சி சந்தையில் தேங்காய் டன்னிற்கு ரூ.28,500 வரை விற்கப்படுகிறது. வர்த்தக மூலங்களின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவிய வறட்சியினால், தேங்காய் உற்பத்தி, இப்பருவத்திலும் (ஜுன் - ஜுலை) குறைந்துள்ளதால் விலை அதிகரித்துக் காணப்படுகிறது. தற்போது அவல்பூந்துறை சந்தையில் கொப்பரை தேங்காயின் விலை கிலோவிற்கு ரூ.96 முதல் ரூ.98 வரை விற்கப்படுகிறது. இவ்விலை உயர்விற்கான காரணம் குறைந்த உற்பத்தி, தொழில்துறை மூலப்பொருளுக்கான தேவை அதிகரிப்பு மற்றும் நுகர்வோர்களின் தேவை அதிகரித்ததேயாகும். கர்நாடகாவிலிருந்து வரத்து ஆகஸ்டு மாதத்தில் முடிவடைவதாலும், வரும் பண்டிகை காலம் வருவதாலும் உள்நாட்டு தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்துகொள்ள ஏதுவாக கடந்த 12 ஆண்டுகளாக பொள்ளாச்சி சந்தையில் நிலவிய தேங்காயின் விலை மற்றும் கடந்த 14 ஆண்டுகளாக அவல்பூந்துறை சந்தையில் நிலவிய கொப்பரையின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், பொள்ளாச்சி பகுதி பண்ணை விலை ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் காய் ஒன்றுக்கு ரூ.16 முதல் ரூ.18 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. சிறந்த தரத்தின் காரணமாக பொள்ளாச்சி சந்தையில் தேங்காயின் விலை அதிகமாக இருக்கும். மற்ற சந்தைகளில் பொள்ளாச்சி சந்தையை விட காய் ஒன்றுக்கு ரூ.1 முதல் ரூ.3 வரை குறைவாகவே இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. கொப்பரையின் விலை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிலோவிற்கு ரூ.100 முதல் ரூ.105 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பரையைச் சேமித்து வைத்து செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விற்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி -0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண் - 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்